செ.வெ.எண்: 826 1.10.08

# செய்தி வெளியீடு

தமிழக அரசின் வேண்டுகோளுக்கிணங்க ஆந்திர அரசு 17.09.2008 அன்று முற்பகல் 11.00 மணிக்கு கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து வினாடிக்கு 400 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விட்டது. இது படிபடியாக அதிகரிக்கப்பட்டு 20.09.2008 முதல் வினாடிக்கு 1500 கனஅடி வீதம் திறந்து விடப்படுகிறது. இந்த தண்ணீர் தமிழக எல்லையை 20.09.2008 அன்று பிற்பகல் 2.00 மணியளவில் வந்தடைந்து படிப்படியாக அதிகரித்து 26.09.2008 அன்று காலை வினாடிக்கு 712 கன அடி வந்தது. இது மேலும் அதிகரித்து 28.09.2008 அன்று காலை வினாடிக்கு 786 கன அடியாகவும், 29.09.2008 அன்று காலை வினாடிக்கு 734 கன அடியாகவும் 30.09.2008 அன்று காலை வினாடிக்கு 748 கன அடியாகவும் 01.10.2008 அன்று காலை வினாடிக்கு 732 கன அடியாகவும் ஏற்ற இறக்கங்களுடன் வந்து கொண்டிருக்கிறது. 20.09.2008 முதல் 01.10.2008 காலை வரை மொத்தம் 624 மி.க.அடி நீர் தமிழக எல்லையில் பெறப்பட்டுள்ளது.

ஆந்திர மாநில எல்லைக்குள் மோட்டார் பம்பு மூலம் நீரை உறிஞ்சி எடுப்பதை கட்டுப்படுத்தும் பொருட்டு தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆந்திர மாநில நீர்ப்பாசனத்துறை அதிகாரிகளை தொடர்பு கொண்டு தெரிவித்த போது, அவர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார்கள்.

1/10/2008

தலைமைப் பொறியாளர்,நீ.ஆ.துறை,
சென்னை மண்டலம், சென்னை–5.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் து...
தலைமைச் செயலகம், செ...